DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No. 234/2025 | Deposition of Witness for : PW2 |
| Name :நம்பிராஜன் | Father/Husband Name :மந்திரம் |
| Age :30 | Village :அம்பலசேரி |
| Taluk :சாத்தான்குளம் | Calling :தனியார் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30 March 2026.

Accused produced on VC.

**<u>முதல் விசாரணை</u> :-**

1. நான் தற்போது கோயம்புத்தூரில் தனியார் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 03.09.2017 அன்று எனது மாமா சிதம்பரம் வீட்டு கிரகப்பிரவேசத்திற்கு அன்று இரவு அவரது பழைய வீட்டில் இருந்து பொருட்களை எல்லாம் ஏற்றி, புதிய வீட்டிற்கு கொண்டு சென்றேன். அப்போது எனது Yamaha RX 100 இருசக்கர வாகனம் பதிவெண் ஞாபகமில்லை. என் மாமா வீட்டருகில் இரவு சுமார் 09.00 மணிக்கு நிறுத்தி சென்றிருந்தேன். மறுநாள் 04.09.2017 அன்று காலை 06.00 மணிக்கு வந்து பார்த்தபோது எனது இருசக்கர வாகனத்தை காணவில்லை. அதை திருடி சென்றவர்கள் விபரம் எனக்கு தெரியாது. அந்த வாகனத்தின் மதிப்பு சுமார் 35 ஆயிரம் இருக்கும். எனது சித்தி மகன் இறந்து விட்டதனால் நான் 04.09.2017 அன்று மதியத்திற்கு மேல் சென்னைக்கு கிளம்பி சென்றுவிட்டேன். பின்பு 09.09.2017 அன்று சாத்தான்குளம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

2. சொன்ன நேரத்தில், சென்ன விதத்தில் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல, போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கொடுக்கப்பட்ட பொய்யான புகாரின் அடிப்படையில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V — Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.03.30 17:23:13 +0530

Judicial Magistrate, Sathankulam.